**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.12/2024 |
| Deposition of Witness for | : | PW – 3 |
| Name and Age | : | பிரபாகரன் (வயது 34) |
| Father / Husband Name | : | கோவிந்தன் |
| Occupation | : | காவல் உதவி ஆய்வாளர் |
| Village | : | மாரண்டஹள்ளி காவல்நிலையம் |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 22.05.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 3**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது மாரண்டஹள்ளி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு புலன்விசாரணை அலுவலர் உதவி ஆய்வாளர் காந்திமதி அவர்களின் கையெழுத்து ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு தெரியும். கடந்த 18.01.2016 அன்று தர்மபுரி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் சிறப்பு உதவி ஆய்வாளர் சரவணன் என்பவர் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முனியப்பன், த/பெ. தாண்டவம் என்பவரை விசரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பி நிலைய மனு ரசீது எண்.21/2016 வழங்கி கோப்பினை உதவி ஆய்வாளர் திருமதி. காந்திமதி அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். அவர் வழக்கினை முதல் கட்ட புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற முகாந்திரம் இருப்பதை அறிந்து 20.01.2016 அன்று நிலைய குற்ற எண்.28/2016 இதச பிரிவுகள் 294(b), 323, 325, 506(ii)–வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார்வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவை முறையே அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ3–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினமே வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் வையாபுரி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். **மாதிரிவரைபடம மற்றும் பார்வைமகஜர் ஆகியவை முறையே**

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.22 17:39:38 +0530

**அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் முனியப்பன், ராஜம்மாள், சிதம்பரம், கன்னியப்பன், செந்தில்குமார் மற்றும் வையாபுரி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சம்பவத்தில் காயம் அடைந்த முனியப்பன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மோகனமுரளி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சிகிச்சை பெற்ற நபர் மருத்துவ அறிவுரையை பின்பற்றாமல் சென்றதாக குறிப்பிட்டு காயம் குறித்த கருத்துரை வழங்க இயலாது என தெரிவித்துள்ளார். **விபத்து பதிவேடு அ.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புலன்விசாரணை அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323, 325, 506(ii) இதசவிலிருந்து 294(b), 323, 324, 506(ii)–இதச வாக பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி முன்பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை. இத்துடன் புலன்விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ராஜா என்பவரை திட்டியதால் அதை கேட்க புகார்தாரர் சென்றதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராஜா வழக்கில் சாட்சியாக இல்லை. மனு ரசீது நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். புகாரில் சம்பவ தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாக்குமூலம் 18.01.2016ம் தேதி பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. காயச்சான்றிதழில் மூன்று நபர்கள் அடித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சரிவர புலன்விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.22 17:39:44 +0530

Judicial Magistrate,
Palacode.